# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W.1 (L.W.1)

| | |
|---|---|
| Name | **வளர்மதி** |
| Father/Husband Name | **ஜெயகுமார்** |
| Calling/Occupation | **கூலி** |
| Age | 28 |
| Address | **குனுக்கனூர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் குனுக்கனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். என் கணவர் பெயர் ஜெயகுமார். ஆஜர் எதிரி என்னுடைய மூத்தார். 8 ஆண்டுகளுக்கு முன்பு ஊரில் திருவிழா நடந்தது. திருவிழாவின்போது ஊரில் சண்டை நடந்தது. என்ன நடக்கிறது என்று நான் பார்க்க போனபோது போலீசார் என்னை காவல் நிலையம் அழைத்து சென்று கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

எங்கள் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் எந்த சண்டையும் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1** ஆகும்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் கடந்த 20.10.2017 அன்று இரவு சுமார் 08.00 மணி அளவில் எதிரிக்கும் என் கணவருக்கும் இடையில் சண்டை ஏற்பட்டது என்றும், என் கணவர் இல்லாத நேரங்களில் எதிரி குடித்துவிட்டு வந்து என்னிடம் தகராறு செய்வார் என்றும், அவ்வாறு ஏற்பட்ட சண்டையில் எதிரி என்னை அசிங்கமாக திட்டி உன்னை ஒழித்தால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சொல்லி நாட்டு துப்பாக்கியை எடுத்து வந்து இத்தோடு செத்துப்போ என்று என்னை பார்த்து சுட்டார் என்றும் நான் ஒதுங்கிக்கொண்டதால் தப்பித்துக்கொண்டேன் என்றும் இல்லை என்றால் குண்டடிபட்டிருப்பேன் என்றும் சொல்லிவிட்டு எதிரி என் மூத்தார் என்பதால் அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பமிட்டுள்ள புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அதை போலீசார் எழுதிக்கொண்டார்கள்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.28 17:39:32 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W.2 (L.W.2)

| | |
|---|---|
| Name | ஜெயகுமார் |
| Father/Husband Name | சின்னசாமி |
| Calling/Occupation | கூலி |
| Age | 29 |
| Address | குனுக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் குனுக்கனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா. 1 என் மனைவி. எனக்கும் எதிரி குடும்பத்திற்கும் எந்த பிரச்சினையும் இல்லை. ஊரில் திருவிழா 8 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தபோது 5 வீடுகள் தள்ளி எங்கள் வீட்டிலிருந்து சண்டை என்று சொன்னார்கள். என்ன பிரச்சினை என்று தெரியாது. எனக்கும் என் அண்ணனுக்கும் எந்த பிரச்சினையும் நடக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் துப்பாக்கி யாருடையது என்று தெரியாது. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் கடந்த 20.10.2017 அன்று இரவு சுமார் 08.00 மணி அளவில் எதிரிக்கும் எனக்கும் இடையில் சண்டை ஏற்பட்டது என்றும், நான் இல்லாத நேரங்களில் எதிரி குடித்துவிட்டு வந்து என் மனைவியிடம் தகராறு செய்வார் என்றும், அவ்வாறு ஏற்பட்ட சண்டையில் எதிரி என் மனைவியை அசிங்கமாக திட்டி உன்னை ஒழித்தால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சொல்லி நாட்டு துப்பாக்கியை எடுத்து வந்து இத்தோடு செத்துப்போ என்று என் மனைவியை பார்த்து சுட்டார் என்றும் என் மனைவி ஒதுங்கிக்கொண்டதால் தப்பித்துக்கொண்டார் என்றும் இல்லை என்றால் குண்டடிபட்டிருப்பார் என்றும் சொல்லிவிட்டு எதிரி என் அண்ணன் என்பதால் அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.28 17:39:38 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W.3 (L.W.4)

| | |
|---|---|
| Name | **சின்னக்கா** |
| Father/Husband Name | **சின்னசாமி** |
| Calling/Occupation | **கூலி** |
| Age | 62 |
| Address | **குனுக்கனூர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் குனுக்கனூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடைய மகன். அ.சா. 1 என் மருமகள். அ.சா. 2 என் மகன். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் கடந்த 20.10.2017 அன்று இரவு சுமார் 08.00 மணி அளவில் எதிரிக்கும் அ.சா.2க்கும் இடையில் சண்டை

ஏற்பட்டது என்றும், அ.சா. 2 இல்லாத நேரங்களில் எதிரி குடித்துவிட்டு வந்து அ.சா. 1யிடம் தகராறு செய்வார் என்றும், அவ்வாறு ஏற்பட்ட சண்டையில் எதிரி அ.சா. 1ஐ அசிங்கமாக திட்டி உன்னை ஒழித்தால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சொல்லி நாட்டு துப்பாக்கியை எடுத்து வந்து இத்தோடு செத்துப்போ என்று அ.சா.1 ஐ பார்த்து சுட்டார் என்றும் அ.சா. 1 ஒதுங்கிக்கொண்டதால் தப்பித்துக்கொண்டார் என்றும் இல்லை என்றால் குண்டடிபட்டிருப்பார் என்றும் சொல்லிவிட்டு எதிரி என் மகன் என்பதால் அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.28 17:39:45 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W.4 (L.W.5)

| | |
|---|---|
| Name | பாண்டு |
| Father/Husband Name | முத்து |
| Calling/Occupation | கூலி |
| Age | 40 |
| Address | மூலனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் மூலனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். எதிரியும் அவரின் தம்பியும் சண்டை போட்டுக்கொண்டார்கள். நான் சண்டையை நேரில் பார்க்கவில்லை. போலீசார் எங்கள் ஊருக்கு வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டு கொடுத்தேன். ஏதோ சண்டை போட்டுக்கொண்டதாக சொன்னார்கள். அதற்காக கையொப்பம் போட்டு கொடுத்தேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் துப்பாக்கி யாருடையது என்று தெரியாது. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பங்கள் முறையே **அ.த.சா.ஆ.2 மற்றும் அ.த.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் 21.10.2017 அன்று 14.10 மணி அளவில் நானும், ரவி என்பவரும் மூலனூர் மந்தவெளியிடம் நின்றுக்கொண்டிருந்தபோது போலீசார் எதிரியை விசாரித்துக்கொண்டிருந்தனர் என்றும் எங்களை சாட்சியமாக இருக்க சொல்லி கேட்டுக்கொண்டு எங்கள் முன்பு மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை போலீசார் பதிவு செய்து அதை படித்து காண்பித்து ஒப்பம் பெற்று அதன் அடிப்படையில் தன் வீட்டிற்கு பின்புறம் புதரில் மறைத்து வைத்திருந்த நாட்டு துப்பாக்கியை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை மகசரில் கைப்பற்றினார் என்றும், இது சம்பந்தமாக போலிசார் விசாரித்தனர் என்றும் சொல்லிவிட்டு எதிரி என் மாமா என்பதால் அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.28 17:39:53 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W.5 (L.W.6)

| | |
|---|---|
| Name | ரவி |
| Father/Husband Name | குழந்தையன் |
| Calling/Occupation | கூலி |
| Age | 27 |
| Address | பீஞ்சை மந்தை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் பீஞ்சை மந்தை கிராமத்தில் வசிக்கிறேன். பாண்டு என்பவரை தெரியும். ஆஜர் எதிரி என் உறவினர் மாமா முறை. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பங்கள் என்னுடையதுதான். அவைகள் முறையே **அ.த.சா.ஆ.4 மற்றும் அ.த.சா.ஆ.5 ஆகும்.** போலிசார் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் போட்டு கொடுத்தேன் எதற்கு என்று தெரியாது. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் 21.10.2017 அன்று 14.10 மணி அளவில் நானும், பாண்டு என்பவரும் மூலனூர் மந்தவெளியிடம் நின்றுக்கொண்டிருந்தபோது போலீசார் எதிரியை விசாரித்துக்கொண்டிருந்தனர் என்றும் எங்களை சாட்சியமாக இருக்க சொல்லி கேட்டுக்கொண்டு எங்கள் முன்பு மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமு்லத்தை போலீசார் பதிவு செய்து அதை படித்து காண்பித்து ஒப்பம் பெற்று அதன் அடிப்படையில் தன் வீட்டிற்கு பின்புறம் புதரில் மறைத்து வைத்திருந்த நாட்டு துப்பாக்கியை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை மகசரில் கைப்பற்றினார் என்றும், இது சம்பந்தமாக போலிசார் விசாரித்தனர் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.04.28 17:40:00 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W.6 (L.W.7)

| | |
|---|---|
| Name | **சின்னசாமி** |
| Father/Husband Name | **பூசி** |
| Calling/Occupation | **கூலி** |
| Age | 49 |
| Address | **நார்த்தமேடு** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் நார்த்தமேடு கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஜெயகுமார் என் மருமகன். நான் அ.சா. 1ன் அப்பா. சண்டையை பற்றி தெரியாது. எதார்த்தமாக வேப்பங்குப்பம் சென்றபோது போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். எதற்கு கையொப்பம் என்று போலிசார் சொல்லவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.6 ஆகும்.** வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் 21.10.2017 அன்று காலை 12.00 மணி அளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் நானும் ஜெயகுமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.28 17:40:06 +0530